உ



யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும்
யாழ் கோண்டாவில்,
கம்பர்லி (Camberley) இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட
எம் குடும்பத்தின் அணையாத அன்புத் தீபம்
அமரர் திருவாளர் கந்தசாமி கணேஸ்வரன் மாமனிதர் ராமு
அவர்கள் விண்ணுலகு எய்தியமை குறித்த

# கணேசாஞ்சலி

**In loving Memory of**

# Mr Kandasamy Ganeshwaran (Ram)

**15.06.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி,
ஆலமரமாகவும் குடும்பத்துக்கு நிழல் பரப்பி
எம்மை எல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் நடாத்தி,
நல்வழி காட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து தமிழ் கூறும்
நல்லுலகோர் அனைவருக்கும்
தோன்றாத் துணையாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழ வைத்த
அன்புத் தெய்வத்தின்
பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருவாளர்
# கந்தசாமி கணேஸ்வரன் மாமனிதர் ராமு

மண்ணில்:
21.
12.
1954



விண்ணில்
15.
06.
2017

## திதி வெண்பா

தேர்ந்தாண்டு ஏவிளம்பி தேடியமை ஆனிமாதம்
சார்ந்தோர் அபரபக்கச் சஷ்டியிலே – கீர்த்தியுறு
நல்லோன் கணேஸ்வரன் சொற்றவறா மாமனிதன்
தொல்லுலகு நீத்திட்டார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

<u>அன்னாரின் குழந்தையுள்ளத்தில்</u>
<u>நேசிக்கப்பட்ட குழந்தையொன்று</u>
<u>தன் கைப்பட வரைந்த அன்னாரின் ஓவியம்</u>



கணேஷ் அண்ணா/ Ganesh Uncle
இனிமை எளிமை மனிதம் இவற்றின்
இன்னொரு வடிவம் நீங்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ கணநாயக அஷ்டகம்

ஏக தந்தம் மஹா காயம் தப்த காஞ்சனா சந்நிபம்
லம்போதரம் விஸாலாக்ஷம் வந்தே ஹம் கண நாயகம்.
மௌஞ்ஜி கிருஷ்ணா ஜினதரம் நாக யக்னோப வீதினம்
பாலேந்து சகலம் மௌளம் வந்தே ஹம் கண நாயகம்.
சித்ரா ரத்னா விசித்ராகம் சித்ரா மாலா விபூஷிதம்
காம ரூப தரம் தேவம் வந்தே ஹம் கண நாயகம்.
கஜவக்த்ரம் ஸுர ஸ்ரேஷ்டம் கர்ண சாமர பூஷிதம்
பாஸாங்குச தரம் தேவம் வந்தே ஹம் கண நாயகம்.
மூஷ கோத்தம மாருஹ்ய தேவா ஸுர மஹா ஹவே
யுத்த காமம் மஹா வீர்யம் வந்தே ஹம் கண நாயகம்.
யக்ஷ கின்னர கந்தர்வ சித்த வித்யா தரை: சதா
ஸ்தூய மானம் மஹா பாஹும் வந்தே ஹம் கண நாயகம்.
அம்பிகா ஹ்ருதயானந்தம் மாத்ருபீ: பரி வேஷ்டிதம்
பக்த ப்ரியம் மதோன் மத்தம் வந்தே ஹம் கண நாயகம்.
சர்வ விக்ன ஹரம் தேவம் சர்வ விக்ன விவர்ஜிதம்
சர்வ சித்தி பர்தா தாரம் வந்தே ஹம் கண நாயகம்.
கணாஷ்டகம் இதம் புண்யம் ய: படே: ஸததம் நர:
சித்யந்தி சர்வ கார்யாணி வித்யாவான் தனவான் பவேத்:
||இதி ஸ்ரீ கணநாயக அஷ்டகம் சம்பூர்ணம் ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே,
சங்கடம் நீங்கிட சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே,
கங்கண பாணியள் கனிமுகம் கொண்ட நல் கற்பக காமினியே,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

கானுறு மலரெனக் கதிரொளி காட்டி காத்திட வந்திடுவாள்,
தானுறு தவஒலி தாரொளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்,
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே,
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்து பொரிந்திட வந்தவளே,
எங்குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தநற் துர்க்கையளே,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

தணதண தண்தண தவிலொலி முழங்கிட தண்மணி நீ வருவாய்,
கண கண கண் கண கதிர் ஒலி வீசிட கண்மணி நீ வருவாய்,
பண பண பம் பண பறை ஒலி கூவிட பண்மணி நீ வருவாய்,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

பஞ்சமி பைரவி பர்வத புத்ரி பஞ்சநல் பாணியளே,
கொஞ்சிடும் குமரனை குணமிகு வேலனை கொடுத்தநல் குமரியளே,
சங்கடம் தீர்த்திட சமரது செய்தனள் சக்தி எனும் மாயே,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

எண்ணியபடி நீ அருளிட வருவாய் என் குல தேவியளே,
பண்ணிய செயலின் பலனது நலமாய் பல்கிட அருளிடுவாய்,
கண்ணொளி அதனால் கருணையைக் காட்டி கவலைகள் தீர்ப்பவளே,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் தரும் தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்,
சுடர் தரும் அமுதே சுருதிகள் கூறி சுகமதை தந்திடுவாய்,
படர் தரும் இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

ஜெய ஜெய பாலா சாமுண்டீஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி,
ஜெய ஜெய துர்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி,
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீதேவி,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்வும், வரலாறும்

தேன்கதலி செவ்வாழை தேன்பலாவும் தேக்கும்
வான்தொட்ட தெங்கு,பனை வாசலிலே நாளும்
செழித்தோம்பும் செம்மண் சேமமுடன் சூழும்
எழில்திரு நெல்வேலி என்றவூர் சேரும்
ஈழவளத் திருநாட்டில் ஈசனடி போற்றுஞ்
சூழவரு சுற்றமொடு சுகித்திட்ட சூலாய்
கந்தசாமி நல்லாசான் காதல்மனை மனோன்மணிதம்
மைந்தனென் றேகினன் மையலுறக் கணேஸ்வரனே!
தேவரின் வடிவழகும் தெய்வமகன் கொண்டு
மூவரை அண்ணரென மூப்பிலைவர் 'அக்கை'யென
எண்மரை உடன்பிறப்பாய் ஏற்றனன் அன்பால்!
கண்மணி போல்காத்து கல்வியுந் தேற்றுவிக்க
அண்ணலுஞ் சிறந்து அழகான கட்டிடங்கள்
திண்ணமுடன் வரையுந் திறனையும் பெற்றாரே!
தேசமதில் நேசமுற்றுத் தேசுடன் வேங்கையென
மாசற்று நேர்மையொடு மண்ணின் பணியாற்றித்

தன்னுயிரைத் துச்சமெனத் தகர்த்தனன் ஊடுருவி
இன்னல்தரு எதிரிபடை இறந்தோடிக் கதிகலங்க!
பின்னரூர் சிங்கையிலே புனிதவதி கைப்பிடித்துத்
தன்னுடைய மனையாளாய்த் தாங்கினன் தளராது!
மேற்கொண்ட கல்வியால் மேம்பட்டு அளவையாளரா
யாற்றினன் நற்பணிதான் யாக்கையதால் சிறந்து !
இன்பமுறு இல்லறத்தில் இருமகவு பெற்றெடுத்து
இங்கிலாந்து தேசத்தில் இருதயத்தி லணைத்து
'பத்மவாகினி' பெண்மகவைப் பாரினில் போற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமெலாம் உவகையுறச் சீராட்டிக் கல்வியுடன்
நற்றமிழு மியலிசையும் நன்றாகத் தேற்றுவித்து
உற்றதொழிற் கல்வியால் வங்கி முகாமைத்துவராய்
இங்கிலாந்து லொயிட்ஸ் வங்கிதனிற் சிறக்க
மற்றும் மருந்தியலில் முதன்மைச் சித்தியையும்
பெற்றத் திறமையதாற்பின் பேருலகச் சுகாதார
நிறுவனத்தி லேற்றபதவி நிலைகண்டு தான்மகிழ்ந்து
அறிமுகமாய் அரும்பணி காவற்றுறை யாற்றும்
தக்கவோர் வயதினன் தோமஸ் எனுங்காளை
மிக்கவோர் துணையாக்கி மருமகனாய்க் கொண்டீரே!
ஆண்மகவைக் 'கிரி'என்று ஆசையுடன் பெயரிட்டு
ஊண்விரும்பித் தானூட்டி ஊரவரும் வியந்திருக்க
ஆளுமையும் நிதிமுகா மைத்துவக் கல்வியுமீந்து
ஆளாக்கி நிதிமுகா மைத்துவராய்ப் பன்னாட்டு
நிறுவனத்தில் பதவிகொள் நிலைகண்டு மகிழ்ந்து
விளையாட்டுத் துறையினிலும் விதமாக விருதுகளை
இளையோன் சூடிவர ஈர்ப்புடனே அணைத்து
நுண்ணுயிர் வல்லுனராம் பெண்ணவள் சோனியாவை
மண்ணிலே துணையாய் மகனிற்கு நிச்சயித்தார்!
வாழ்வில் எளிமையும் வாகான நேர்மையும்
தாழ்மையும் உவகையாய்த் தாங்கும் திறனும்
ஆழமாய் அன்பும் ஆதரித்து அணைத்து
சூழுமெத் துன்பமும் சூழாது விரட்டிட்ட
பாசம் பொழிந்த பாங்கான இதயமுமே
நேசமாய்த் துடிக்க நிசமாய் மறுத்து
நின்றதுவே உற்றோர் நிலைகுலைய உத்தமரும்
சென்றீரே உலகைச் சாராத ஆத்மமென!
வாழ்வில் செழுமையோடு வாழ்ந்து முழுமையாய்
ஏழ்பிறவி நீங்க ஏற்றமொடு விண்ணுலகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டறிவோம்
சிறப்புடனே வாழ்ந்த சீரான வாழ்விற்கு
இறப்பும் ஈகச்சுடராம் இகபர மெங்கணுமே!
தொலைக்காத நினைவுகள் தொடர்ந் திருக்கும்
நிலைத்த புகழுடம்பு நீடூழி வாழ்ந்திருக்கும்
தூயனே நின்றன் தூயவாத்மா சாந்தியுறுக
மாயப் பிறப்பறுக்கும் மலரடிகள் சேர்ந்து!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தமும் ஆதியும்

யாழ்ப்பாணத்தின் வடபாகத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி என்னும் ஊரில் பிரம்மஸ்ரீ ந கந்தசாமி ஐயர் - மனோமணி தம்பதியினருக்குக் கனிஷ்ட புதல்வராக, எங்கள் அன்புச் சகோதரனாக கணேஸ்வரன் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தி நான்காம் ஆண்டு, மார்கழி மாதம் இருபத்தொராம் திகதி பிறந்தார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக ஐந்து மாதக் குழந்தையாக இருக்கும்போதே தாயாரை இழக்க நேரிட்டது. தாயன்பு கிடைக்காவிடினும் தந்தையார், சகோதர சகோதரிகள், பாட்டியான திருமதி செல்லம்மா அட்சலிங்க ஐயர் மற்றும் அயலவர்களான திரு, திருமதி தம்பிமுத்து தங்கமுத்து அவர்கள், இவர்களின் புதல்விகளான திருமதி மகேஸ்வரி, திருமதி நாகேஸ்வரி ஆகியோரின் ஏகோபித்த அன்புக் கரங்களின் அரவணைப்பிலும் சிறந்த வழிகாட்டலிலும் நன்கு வளர்ந்தார். எல்லோருக்கும் செல்லப் பிள்ளையாக இருந்தார்.

இவரின் கருமையான சுருண்ட கேசம், சிவந்த நிறம், சிரித்த முகமுடைய இவருடைய வசீகரத் தோற்றம் என்பன எல்லோரையும் அவரிடம் அன்பு பாராட்டச் செய்யும். இவரும் தனது குடும்பத்தினருடனும், அயலவர், நண்பர்கள், உறவினர்களுடனும் அன்பாகவும் நகைச்சுவையாகவும் பழகுவார். இவை மட்டுமின்றி பூனை, ஆடு, மாடு போன்ற வாய்பேசாப் பிராணிகளிடமும் அன்பு காட்டினார். தனது பொழுது போக்காக வீட்டிலே வளர்த்த ஆடு, மாட்டிற்கு இலை, குழை, புல் என்பவற்றைச் சேகரித்து, அவற்றை உண்ணக் கொடுத்து அவை உண்பதை அருகில் நின்று பார்த்து இரசித்து அகமகிழ்வார்.

அத்துடன் இயற்கையை இரசிப்பதிலும் ஆர்வம் உடையவர். மா, பலா, தென்னை போன்ற மரங்களை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து ஏழாம் ஆண்டு நாட்டிலே ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டுக் காலத்தில் மக்கள் அனைவரும் தமது நிலத்தில் பயிர்களை வளர்த்துப் பயன் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது தானும் எமது வீட்டில் மரவள்ளி, சோளம், துவரை என்பவற்றைப் பயிரிட்டு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தார்.

அவரின் சிறுவயதுக் குறும்புகளையும், விளையாட்டுகளையும் எல்லோரும் மிகவும் விரும்பி இரசிப்பார்கள். எவருடனும் இனிமையாகப் பழகி எளிதில் சிநேகிதமாகி விடுவார். இவரின் நித்திரையைக் குழப்பினால் அல்லது கோபம் வந்தால் உடனே பாய்ந்து வாயினால் ஒரு கடி கொடுப்பார். வீட்டில் எல்லோரும் அவரின் கடிபிரசாதத்தினை வேண்டியிருக்கிறோம்.

ஒருமுறை அவர் தனது மூக்கினுள் சுண்டங்காய் ஒன்றைப் புகுத்தி விட்டார். பின்னர் மிகவும் கஷ்டப்பட்டு அயலவரின் உதவியுடன் வெளியே எடுத்தோம். இப்படி எத்தனை எத்தனையோ குறும்புகள்! இவர் தனது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலையிலும் பின்னர் உயர்கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டிடப் படவரைஞருக்கான மேற்படிப்பைக் கற்றுப் பட்டச் சான்றிதழையும் பெற்றார்.

பின்னர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு தான் மனம் விரும்பிய பெண்ணாகிய புனிதவதியைத் திருமணம் செய்தார். திருமணம் முடித்து இலண்டன் மாநகரத்தில் இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்.

பத்ம வாகினி, கிரி என்னும் இரு புதல்வர்களைப் பெற்றெடுத்தார். அவர்களைக் கல்வி கேள்விகளில் மேம்படச் செய்தார். தனது தந்தையாரை இலண்டனுக்கு அழைத்து இங்கிலாந்து நாட்டைச் சுற்றிக் காண்பித்து மனநிறைவு பெற்றார். தான் நோயுற்ற போதும் தன்னைக் காண வந்த சகோதரர்க்கும் இலண்டன் மாநகரைச் சுற்றிக் காண்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டு தனது புதல்வியான பத்மவாகினி - தோமஸ் திருமணத்தை நடாத்தியும், புதல்வரான கிரி - சோனியா திருமண நிச்சயதார்த்தத்தையும் நடாத்தி ஒரு தகப்பனார் தனது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமையையும் தனது குறுகிய வாழ்க்கைக் காலத்தில் செய்து முடித்துள்ளார்.

இருதய நோய் வாய்ப்பட்டு அதன் காரணமாக சுவாசப் பையிலும் நோய்வாய்ப் பட்டபோதும் தனக்கு ஒரு வருத்தமும் இல்லை என்று கூறி எங்களுடைய கவலைகளைக் குறைக்கவே முயற்சிப்பார். இவ் வருடம் சித்திரை மாதம் இருபத்தேழாந் திகதி அவருக்கு இருதயச் சத்திர சிகிச்சை நடந்தது. சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது எனினும் வைத்தியசாலையில் ஏற்பட்ட கிருமித்தொற்று நோய் காரணமாக நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டு மூச்சு விடுவதில் மிகவும் சிரமத்திற்கு உள்ளானார். அன்றிலிருந்து உடலியக்கம் நினைவற்ற 'கோமா' நிலையில் சுமார் நான்கு கிழமைகள் இருந்தார். அவரது மனைவி புனிதா, பிள்ளைகளின் மனம் தளாராத கடும் முயற்சிகளாலும், பிரார்த்தனையின் பலனாகவும் அவரது உடல்நிலை முன்னேற்றம் கண்டது. நாம் எல்லோருமே அவர் உடல்நிலை தேறிவிட்டார் என்று மனநிம்மதி பெற்றோம். அந்த நிம்மதி நிலைக்கவில்லை. அவருடைய இருதயம் இயங்க மறுத்து ஜூன் பதினைந்தாம் திகதி (தமிழிற்கு ஆனி முதலாம் திகதி) அவர் எங்களை விட்டுப் பிரிந்த செய்தி பேரிடியாக எம்மைத் தாக்கியது.

அவர் பிறந்த தினம் டிசெம்பர் இருபத்தொராம் நாள்! - அன்று பூமியின் வடபாகத்தில் பகல் நேரம் குறைந்த நாள்; ஆனால் எங்கள் எல்லோருக்கும் அது ஓர் ஒளி நிறைந்த இனிய நாள்!

அவரது பூதவுடல் அக்கினியுடன் சங்கமித்தது ஜூன் இருபத்தொராம் நாள்! அன்று பூமியின் வடபாகத்தில் பகல் நேரம் கூடிய நாள்! ஆனால் எங்கள் யாவருக்கும் இருள் நிறைந்த நாளாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குடும்பத்தில் அவர் கடைசிப் பிள்ளை (அந்தம்); அவரின் பெயரோ கணேஸ்வரன் (பிள்ளையாரின் பெயர்) - எல்லாவற்றிற்கும் முதன்மையானவர் (ஆதி) அதனால் தானோ என்னவோ எங்கள் குடும்பத்தில் இறைவனடி சேர்ந்த முதல் சகோதரராகி விட்டார்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது அன்புக் குடும்பத்தினருக்கும் எங்கள் எல்லோருக்கும் மன ஆறுதலைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள் நாடும் அவரது பாசமிகு சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள் (கோண்டாவில், கனடா)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நிற்கும் நினைவுகள்



அன்பும், பண்பும், பரிவும் கொண்டெமை உங்கள் அன்பில் திளைக்க வைத்த பாசமிகு மருமகனே. உங்கள் இன்சொல்லும் இனியமுகமும் காணாமல் கேட்காமல் எங்கே எங்கே என்று வாடி நிற்கின்றோம். உங்கள் இன் உயிரைக் கொடுங்காலன் கவர்ந்தெடுத்துச் சென்றான் என்ற கொடுஞ் செய்தி கேட்கும் அபாக்கியசாலியாய் அதிர்ந்து நின்றேன். இறைவன் கரமதில் ஈந்திருப்பான் என்று திடம்.

என் கணவன் மறைவின் பின் எம் வாழ்க்கைப் பளுவில் பங்கு கொண்டே வாழ்ந்திருந்தீர்கள். 'அம்மா சுகமாய் இருக்கிறீர்களா?' என்று பரிவுடன் வினவும் இனிய ஒலி என் காதில் இன்னமும் ஒலித்த வண்ணம் இருக்கிறது. உள்ளம் வெதும்புகிறது. குடும்பத்தின் பாசமிகு தூண் ஒன்று சரிந்து விட்டதை எண்ணிக் கலங்குகின்றேன். தன்னலம் கருதாது பிறர் நலம் கருதி வாழ்ந்த வாழ்வும் மாயமாய் மறைந்ததோ?. ஆன்ம அழியாதென்ற ஆசானின் அரிய மொழி ஆறுதல் தந்தாலும் பாசமுள்ள மனம் அதை ஏற்க மறுக்கின்றதே. உங்கள் இன்சொல்லும் இனிய நினைவுகளும் எம் மனதில் பசு மரத்தாணி போல் என்றும் நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில் இளைப்பாறப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் அன்புடன்
மாமி (அம்மா) யோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Daughter's (Pathma Vahini Clargo) Tribute (Speech)

on the Day of the Funeral (21.06.2017) at East Hampstead Crematorium

Ladies & Gentleman, firstly I want to say thank you from the bottom of my heart for just being here. I know a lot of you have travelled from near and far today just to show your support. It is such a healing gift to be surrounded by your love and respect for my father. Thank you so much for coming and showing my family and myself that my Dad holds a special place in your heart. Your friendship allows us to know that my father will be nearby always, because of the memories stored within you. It was once written that the value of a person's life is directly related to the number of people they positively affect. I can't begin to tell you how many calls, texts and notes I've received in the last week from people my father knew. Many are here today, and I'm sure he is very glad about that.

For days, I thought about what I could possibly say to bring honour to Dad in these moments. I hoped & prayed for the right words – eloquent & profound words, to express what Dad meant to me. But all I could come up with was this…



**I loved being Dad's daughter.**

**I really, really loved being Dad's daughter.**

Most of you knew as him Ganesh or Ramu, but I simply knew him as my Hero.

When asked to describe him – I've heard people say 'funniest man I have ever met, larger than life, loyal friend and a fantastic father.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At the risk of sounding cliché, Dad was one of the greatest men I have ever known – and likely ever will. He was the most down to earth person you will ever meet. He just had this fundamental and abiding respect for all people – regardless of your age, race, background, he immediately saw the best in you. Always.

Spending so much time with Dad in hospital, we were able to talk about an array of different topics. I got to know him in a more meaningful way than before. Not just as a father and daughter but as a friend. Some of my most favourite conversations stemmed from our recent times together.

But without a doubt the most wonderful thing about my father was his humour. Especially at the most inopportune times. My father's one liners deserved their very own book. Maybe their own awards? My dad could always make you laugh. He could always cheer you up and he had a beautiful way of making you see that you should never take life too seriously. I am so proud to say that this is one of the best lessons he has passed down to me. Life is too short to let anyone or anything make you unhappy.

I haven't quite come to terms that I will never have another conversation with my father again. The day Dad passed was the day we truly lost one of our great champions here on earth.

Let me add one more thing. Let us all – to quote my Dad – **try to make the world a better place, be a good person, love everyone, don't hate anyone. Just be happy.** The world is a better place because Kandasamy Ganeshwaran lived in it for sixty-two years. Life is a beautiful cycle. And along the same lines, I have great news that you all should remember. Regardless of your beliefs in the afterlife, this much I can assure you: my Father remains alive and well. He is all around me, in all of you, every day.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thank you, Dad, for being the most incredible father I could have ever wanted. Thank you for making sure that I have known I was loved every single day of my life. You say you were so lucky to have us in your life, but you were wrong Dad. We were the lucky ones. Out of all the Fathers in the world, we were given you!

Dad, I'll miss you more than I can ever say. I will miss your special nicknames for me. I will miss your voice and your funny text messages. Mostly, I will just miss you. I can't wait to teach my unborn child everything you ever taught me.

They will always know how amazing their Thaththa (Grandfather) was.

I love you Dad and I will always love being your daughter.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Tribute from the Son (Giri Ganeshwaran)

My dearest Old man,

Your battle is now over, no more tubes connected to your body,
no more pain, no more suffering, now you are no longer weak.
I still do not understand why this had to happen to you,
but I am proud to say you are my dad, the greatest man I ever knew.
Although you will not be here to walk me down when Sonia & I get married,
when that day comes I know you will be by my side with a smile.
You were always there for me and never once made me cry,
until the day you closed your eyes and had to say goodbye.
Now you are my Angel, so spread your wings out wide,
please wrap them around me whenever I need you.
Our time together was memorable and God took you way too fast,
But the most precious thing to me was you being there for my first breath,
and me being there for your last.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Tribute from the Son-in-law (Thomas Clargo)

Dear Appa,

I always knew what a kind generous man you were. But as it is often the case, only in death do we truly realise how much of an effect people have on us. You protected your family, were a loving husband and a wonderful Father. Not to mention you made the best potato curry and roti ever!! I'll miss that. (Don't tell Amma ☺)

I just wanted to say thank you for accepting me as part of your family from the very beginning.

You have always been on our side and supported Pat and I through everything.

But most of all - Thank you for Pat. I'll take it from here Appa. You can stand down now. Rest in Peace.



**************************************************************************

**Life Quote**

**People with a good sense of humour have a better sense of life**

*- Anon*

**************************************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Daughter-in-law Sonia Buttoo's Tribute

Dearest Dad,

I'm so grateful that I had the chance to get to know you and understand and witness the beautiful relationship you and Giri shared. It breaks my heart that you are not going to be there for your Master and I on our big day and new life together but I know that you will be watching over us always. You were always so thoughtful, kind, cheerful and welcoming to me and all of my family, thank you. We miss you every day and will never forget you. Thanks for all the advice, love and joy you gave. You were gone too soon, I hope that you are in the best, most peaceful place now.

**Love, Sonia**



*****************************************************************************

**Kindness is the language that deaf can hear and blind can see**

*- Mark Twain*

*****************************************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் புலம்பல்

ஆருயிரே!
அன்புத் துணைவா!
அகாலம் அழைத்த
அவசரத்தில்
அன்பில் இணைந்த
அன்றிலை
நீங்கினையோ?
என் உள்ளம் கவர்ந்தவை
உன்
நேர்மையும் அன்பும்!
"எளிமை என்பதே வாழ்வு"
எனும் தாரக மந்திரம் கொண்டாய்!
அன்னைக்கு அன்னையாய்
தந்தைக்குத் தந்தையாய்
என் வாழ்வின் ஆதாரம்
ஆனவன் நீ!
ஆரவாரமில்லாமல் வாழ்ந்து
தமிழையும் தேசத்தையும்
அமிழ்தாய் உயிராய்
நேசித்த
நேர்மையான போராளியே.....
இன்னும்
எத்தனை பிறவி இருந்தாலும்
அத்தனையிலும்
உம்மோடு வாழும் வாழ்வு மட்டும்
வேண்டும் எனக்கு!
என்னுயிரே
என்றும் உம் நினைவில்
உம் அன்பு மறவாத
ஆருயிர் மனையாள் புனிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**My Dearest Ganesh**,

We started our lives together 32yrs ago in the voyage of marriage in Singapore in March 1985. Ever since, entire journey was beautiful with full of memories. Thank you for being with me by my side – protecting me and guiding me throughout! We shared so many happy moments together with joy and laughter. Through sad times, we found comfort in each other's arms We lived every moment of our life to the full and meaningfully! I am gutted that you have fallen into this deep slumber and not waking up for me.

I knew little that on the 15th of June 2017 morning, God was going to call your name!

It broke my heart! You did not go alone, for part of us went with you – the day God called you home!

Our family chain is broken! Nothing seems the same! But as God calls us one by one, the chain will link again!

We love you and going to miss you a lot! Though we can't see you, please be always at our side guarding us and guiding us!

Forever you will reside in my heart and I want to be with you in all my reincarnations to share the life with you! - Forever yours Punitha





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூமாலை

மூத்த அண்ணன் கணேஷனாக எம் வாழ்க்கைப் பயணத்தில் இணைந்து, நாம் தந்தையை இழந்து தவித்தபோது அவ்விடத்தை நிரப்பி எமை உற்சாகப்படுத்தி ஒரு தோழனாகி எம்முடன் பழகி வழி நடத்தினீர்களே. நேர்மை, எளிமை, கடின உழைப்பு என்ற விழுமியங்களுடன் இவ்வுலக வாழ்க்கை நீரோட்டத்தை எதிர் கொண்டீர்கள். தொலைபேசியில் அழைக்கும் பொழுது தனித்துவமாக 'அஸ்லாமு அலைக்கும்' என விளிப்பீர்களே. எத்தகைய இறுக்கமான சூழ்நிலையையும் மாற்றிச் சிரிக்க வைக்கின்றவர் மட்டுமல்லாது, 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதற்கமைய துன்பங்களைப் புன்முறுவலுடன் வரவேற்றீர்கள். விளையாட்டு, சமயம், அரசியல், சமையல் என பல் வேறு விடயங்களிலும் எம்முடன் விவாதித்து உங்கள் அறிவைப் பகிர்ந்து கொண்டீர்கள். சத்திர சிகிச்சை முடிந்து விரைவாக நலமுடன் வீடு திரும்புவேன் எனக் கூறினீர்களே. எம்மை காத்திருக்க விட்டு வேறு வழி சென்றது ஏனோ? மீண்டும் பார்க்க, கதைக்க, விவாதிக்க, சிரிக்க உங்களை தேடுகின்றோம், தேடிக்கொண்டேயிருப்போம். எம் தந்தை போல் தாமும் எப்பொழுதும் எம்முடனிருந்து வழி நடத்துவீர்கள் என்பதில் ஐயமேதுமில்லை. உங்கள் இனிய நினைவுகளை கனத்த இதயத்துடனும், ஈரவிழிகளுடனும் தாங்கி நின்று இக் கண்ணீர்ப் பூமாலையை உங்கள் பாதார விந்தத்தில் சமர்ப்பிக்கின்றோம். உங்கள் ஆத்மா இறைவன் திருமலர்ப் பாதத்தில் எப்போதும் வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.
ஒரு பொல்லாப்புமில்லை!

மைத்துனர் வைத்திய கலாநிதி கிருபாகரன் பேரின்பநாயகம் , மைத்துனிமார் திருமதி நீலவேணி சிவம், திருமதி சிவகங்கா கிருஷ்ணராஜா, திருமதி தயாரூபி ஸ்ரீலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனின் அஞ்சலி

கணேஷ் - அஞ்சலிகள் .

நம்பமுடியவில்லை .

கடைசி வரை எப்படி அந்த ரகசியம் எப்படி காத்தார் .முன்னாள் விடுதலை புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர் ராம் தான் நண்பன் கணேஷ் . எனது எட்டாம் வகுப்பில் யாழ் இந்துவிற்கு கணேசுடன் ஒன்றாக சேர்ந்து சயிக்கிளில் பயணம் செய்யும் போது உருவான நட்பு கிரிக்கெட், ,இலக்கியம், ஆங்கில சினிமா என்று விரிந்தது. சற்று சிறிய ஸ்போர்ட்ஸ் சயிக்கில் தான் அவரது வாகனம் .

சர்வதேச கிரிக்கெட்டில் மிக ஆர்வமான கணேஸ் John Edrich, Geoffrey Boycott, Barry Richards இவர்களது ஆட்டங்கள் பற்றி பேசினாலும் அவருக்கு மிகவும் பிடித்த கிரிக்கெட் வீரர் Ajit Wadekar தான் .மைதானத்தில் Wadekar என்றுதான் இவரை அழைப்போம் .இருவருமே இடக்கை ஆட்டக்காரர்கள் .நல்ல துடுப்பாட்டகாரானான இவர் ஒரு முறை பந்து வீச கேட்டு ஆறு பந்துகளையும் எதிரே பாட் செய்தவர் சிக்சர்கள் அடித்ததும் நடந்தது.

சயிக்கில் பயணத்தையும் தாண்டி பின்னர் விடுமுறை நாட்களில் கடைக்கு பொருட்கள் வாங்க செல்லும் வேளைகளில் கணேசின் வீட்டிற்கு முன்னால் ஒரு தரிப்பு என்பது வழக்கம் ஆகிவிட்டது . ஏதாவது ஒரு விடயம் தொடங்கி மணிக்கணக்கில் பேசுவோம் அது ஆங்கில சினிமா Steve McQueen -The Great Escape, Michael Caine -The Italian Job ஆக இருக்கலாம் .

குமுதத்தில் தொடர்கதையாக வந்த "பட்டாம் பூச்சி ",தினமணி கதிரில் வந்த புஸ்பா தங்கதுரையின் "ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது, அல்லது ஜெயகாந்தனின் "ஒரு நடிகை நாடகம் பார்க்கின்றாள்" பற்றியும் இருக்கலாம் .எனக்கு ஜெயகாந்தனின் "ஊருக்கு நூறு பேர் " புத்தகத்தை வாசிக்க தந்தவரும் கணேஷ் தான். பாடசாலை வாழ்க்கை முடிய நான் வெளிநாடு செல்ல ஆயத்தமான காலங்களில் கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரியில் Draftsman course படித்துகொண்டிருந்தார் .

81 ஆம் ஆண்டு நான் வெளிநாடு வரும்வரை எமது நட்பு தொடர்ந்தது .

வெளிநாடு வந்தும் பல வருடங்களின் பின்னர் தான் கணேஷ் "ராம் " என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் எழுபதுகளில் இருந்து "விடுதலைப்புலிகள்" அமைப்பில் இயங்கிவந்ததாக அறிந்ததும் மிக அதிர்ச்சியாக இருந்தது .
எவ்வளவு விடயங்கள் என்னுடன் மணிக்கணக்கில் பகிர்ந்த கணேஷ் இந்த விடயத்தை எப்படி மறைத்து வைத்திருந்தார் என்று இன்றும் என்னால் நம்பமுடியாமல் இருக்கின்றது .
ஆழ்ந்த அஞ்சலிகள் நண்பா!!.
இங்கு கணேசை பற்றி வந்த பதிவு ஒன்றில் இருந்து ஒரு பகுதியையும் இணைகின்றேன் .

**************************************************************************************************

"1979 ம்ஆண்டின் நடுப்பகுதியில்தான் ராமுவை சந்தித்தேன்.யாழ் ரிம்மர் ஹோலில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வரலாறு மற்றும் போட்டோ கண்காட்சி ஒன்று நடந்தது. அதனை பார்ப்பதற்காக தலைவர் என்னையும் கிட்டுவையும் கூட்டி சென்றிருந்தார்.

நாம் யாழ் ரிம்மர்மண்டபத்தில் நுழையவும் அங்கு ஐயர், குமணசாமி, முகுந்தன் (உமா), பொன்னம்மான் ஆகியோருடன் நின்றிருந்த ஒருவரை தலைவர் இவன்தான் ராமு என்று எமக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதுதான் முதல் சந்திப்பு.ராமுவும் தலைவரும் ஏறத்தாள ஒரே வயதினர்.சிவப்பான தோற்றம். சாதாரண உயரத்திலும் சிறிது குறைவான தோற்றம். சுறுசுறுப்பான நகர்வு என்'று மனதில் படிந்த உருவமாக ராமு அன்றே..

அதன் பின்னர் சில மாதம் கழித்து மாங்குளம் பண்ணையில் அமைப்பின் முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சிக்காக சென்ற போது அந்த பண்ணையின் பொறுப்பாளராக ராமு நின்றிருந்தார்.. வழமையாக இரண்டு மூன்று பேர் மட்டுமே இருக்கும் அந்த பண்ணை பயிற்சிக்காக வந்தவர்களால் கலகலப்பானது.

தமிழீழத்தின் ஏதேதோ பகுதியில் நின்றிருந்த அதிகமானவர்கள் அங்கு கூடினோம். தலைவர், செல்லக்கிளிஅண்ணா, கலாபதி, மாத்தையா, ஐயர், பொன்னம்மான், ரகு, கிட்டு, சோமண்ணை, சித்தப்பா, பீரிஸ் அண்ணை, கந்தன், சுந்தரம் ஜோர்ஜ் மதி நான் என்று அந்த பண்ணை குலுங்கியது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையின் பொறுப்பாளரான ராமு என்னைவிட பலவருசங்கள் மூத்தவராக இருந்தாலும் நான் அவரை ராமு என்றே அழைக்கலாயினேன். அந்தபண்ணையில் வயதில் சிறியவர்களில் ஒருவரான எனக்கு என்னுடைய சமையல் முறையில் ராமு சலிக்காமல் உதவிகள் செய்வார்.காட்டின் உள்ளே வெகுதூரம் கூட்டி சென்று காட்டின் நுட்பங்களை மரங்களின் கொப்'புகள் செடிகளின் கிளைகள் இயல்புக்கு மாறாக வளைந்து முறிந்து இருந்தால் அதன் அர்த்தம்; என்னவென்றும் காலடி தடங்களை காட்டுக்குள் அடையாளம் பிடிப்பது எப்படி என்றும் ராமு நிறையவே சொல்லி தந்தார்."

*****************************************************************************************

பரதன் நவரத்தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர் ஒருவரின் இதயத்தில் இருந்து.........

ஈழத்தமிழர்களுக்கு சொந்த நாட்டில் ஏற்பட்ட இன்னல்களைத் துடைக்கும் பொருட்டு ஆரம்பகாலத்தில் குறிப்பாக 70 களில் விடுதலை உணர்வை உயிர் மூச்சாகக் கொண்டு போராட்ட களத்தில் குதித்த ஒரு மாபெரும் வீரரைப் பற்றி அவருடன் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நட்பு கொண்டவன் என்பதனால் அவரது உயர் பண்புகளைப் பற்றிக் குறிப்பிடுவதே என்னுடைய நோக்கமாகும்.

உலகில் நிகரற்ற போராற்றலைக் கொண்ட விடுதலைப் போராட்ட அமைப்புகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே. அந்த அமைப்பில் ஒரு செயற்பாட்டு போராளி உறுப்பினராக தன்னையும் ஆக்கிக்கொண்டார். அவரது வீரத்தையும், விடுதலை வேட்கையையும், தனி மாந்த ஒழுக்கத்தையும், பொது வாழ்வின் தூய்மையையும், வரிந்த கொள்கையை விட்டுக்கொடுக்காத மனவுறுதியையும், வரலாறு, கைமருத்துவ அறிவையும் இதுவரையில் தனிமனிதராக வேறு யாரிடமும் பார்த்ததில்லை. இத்தகைய ஒழுக்க மாபுகளைக் கடைப்பிடித்து அண்மையில் மறைந்த அவரது திருப்பாதங்களை எனது சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

தெய்வங்களுக்கு எத்தகைய அறிய குணங்கள் இருக்கும் எனக் கூறுகின்றார்கள். அத்தகைய அரிய குணங்கள் பலவற்றை பழகிய முழுக்காலத்திலும் எனது நண்பரிடம் இருந்ததையிட்டு உங்களை உயர்ந்த இடத்தில் போற்றுகின்றேன். உங்கள் வாழ்வின் உயர்வை பெருந்தகையின் குறளுக்கு ஒப்பாக்குகின்றேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

இக்குறளுக்கு ஒப்பாக வாழ்ந்து காட்டிய உங்களைப் போற்றுகின்றேன். நாப்பிளக்கப் பொய் பேசி நவநிதியம் போடும் இக்காலகட்டத்தில் உயிருக்கு மேலாக மதிக்கப்படும் ஒழுக்கத்தை மிகவும் கட்டுப்பாட்டுடன் பேணிவந்த தமிழ்ப் பெருந்தகைகளில் நீங்களும் ஒருவர் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. நாமும் அதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிப்போமாக. அவரை ஒழுக்கம் மட்டுமல்ல மறமும் மானமும் கொண்ட வீரன் என்று குறிப்பிட விரும்புகின்றேன்.

உலக நடைமுறைகள் பல பண்பாளர்களைச் சார்ந்து இயங்க வேண்டும் இல்லையேல் அந்நடைமுறைகள் நாசமாகிவிடும் எனக் கூறுவார்கள். இதனையே வள்ளுவப் பெருந்தகை

"பண்புடை யார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

மானம், வீரம், ஒழுக்கம் மட்டுமல்ல, உங்கள் குழந்தையுள்ளத்தையும் நான் யாரிடமும் கண்டதில்லை. ஒழுக்கத்தில் இமயம் நீங்கள். அந்த இமயத்திற்கு பொன்னாடை போர்த்துவது எனது நோக்கமல்ல. அவைகளை நான் பேண விரும்புகின்றேன்.

உங்கள் ஆவி பிரியும்போது அருகில் நான் இருக்கவில்லை. வழியனுப்பும் வாய்ப்பு கூட எனக்கு கிடைக்காத படி வெளிநாடு சென்றிருந்தேன். உங்கள் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் குழந்தையுள்ளத்தையும் இரவலாக எனக்கு தந்து விட்டுப் போயிருக்கக்கூடாதா எனக் கேட்கத் தோன்றுகின்றது. கிடைத்திருந்தால் வரும்போது உங்கள் காலடியில் போட்டு வணங்குவேன். இறுதிப் பயணத்தில் நான் கலந்து கொள்ளாவிட்டாலும் எனது நேசம் உங்கள் குடும்பத்தாருடன் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். உங்கள் நினைவுகள் என்நெஞ்சில் இறுதிவரை நிறைந்திருக்கும்.

அன்புடன்
சி.ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Periyappa

There is a lot to say about our Periyappa. He was very kind and loving. We cherish many good memories about him. We remember when he used to play football with us and teach us new exercises. We still remember how we used to play cards as a family seated around the table after a good meal whenever he visited us at home. He always supported us and made us feel good about ourselves.

Thank you Periyappa for making us more confident about ourselves as individuals today. We value the moment when he taught us to look in the mirror every day and repeatedly say "I am the happiest girl in the world"; We never forget those words. You will always be in our heart and we will always remember you. We Love you Periyappa very much. Rest in Peace.

Love from
**Abirami Loganathan and Gayathri Loganathan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Crocodile and Monkey -

## a favourite fable of Appa's to tell us when we were young children




1. There once lived a crocodile in a lake, surrounded by green grasses, sweetest jamun trees and beautiful mountains.



2. The crocodile became friends with a monkey who also lived by the lake.




3. The crocodile would visit the monkey each day. The monkey used to offer the crocodile sweet Jamun fruits from the trees.



4. One day the crocodile took the Jamun fruits to his wife.



5. The greedy wife after eating the fruits said to her husband, "Imagine how sweet the monkey's heart would taste as he eats these Jamun fruits every day!"



6. So the crocodile's wife asked him to invite the monkey to their home.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*7. The next day crocodile went to see monkey and invited him to lunch.*



*8. The monkey happily accepted crocodile's invitation. But asked the crocodile, "How can I come with you? I don't know how to swim."*



*9. The crocodile said, "Don't worry monkey you can ride on my back."*



*10. After swimming for a while, the crocodile tried to push the monkey under the water to kill him.*




*11. Monkey was shocked and asked the crocodile what happened.*



*12. The crocodile explained to monkey about the conversation with his wife and their plan to eat monkey's heart.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*13. The monkey got a clever idea quickly. He told the crocodile, "Oh my! I left my heart behind at my Jamun tree. Let us go back and get it."*



*14. The foolish crocodile believed the monkey and swam back to the Jamun tree.*



*15. As soon as the monkey saw his tree he jumped off crocodile and escaped with his life.*




*16. The moral of this story is that in the end the one who tries to cheat others will be the one to lose all.*

**************************************************************************

"தூய்மையான மனமே சிறந்த யோகாசனம்"

PURE MIND IS THE BEST OF YOGASANAS

-மார்க்கண்ட சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரைப் பற்றி பொங்குதமிழ் செய்தித் தளத்தில் கூறப்பட்டவை




## இலண்டனில் விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினர் ஐ.எஸ்.ரி ராம் அவர்களின் இறுதிநிகழ்வுகள்



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

5.20.2017 1:51:06 PM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

தேசத்தின் நேசத்தோடு, எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத்தெய்வம் அமரர் கந்தசாமி கணேஸ்வரன் (இராமு) அவர்களின் அமரத்துவத்தால் தாங்கொணாத் துயரத்தில் நாமிருந்த வேளைகளில் ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தோர், அனுதாபங்கள் தெரிவித்து அன்போடு அரவணைத்தோர், தொலைபேசி மூலமாக எங்களின் துயரோடு தங்களின் துயரையும் பகிர்ந்து கொண்டோர் அனைவர்க்கும் நாம் நன்றி தெரிவிப்பதோடு அஞ்சலி செலுத்தியோர்க்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

*Dear family members, relatives, friends and well-wishers, Thank you for your kindness following the passing of our Beloved Husband, Loving Father and Father-in-Law of our family Mr Kandasamy Ganeshwaran.*

*We are so grateful for everything you have done to support us during this sad time. We appreciate the flowers, meals, the visits and phone calls. Thank you also for attending the funeral on the 21st of June 2017; it meant a lot to us.*

*Thank you for being there for us.*
*Our sincere thanks from the bottom of our heart*
*Punitha, Vahini and Tom & Giri and Sonia*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா

| | |
|---|---|
| இயற்றியவர்: மருதகாசி | ஆண்டு 1956 |
| அன்னாரிற்குப் பிடித்த திரை இசைப்பாடல் -அவர் வேண்டுகோளிற்கு இணங்க அவர் இறுதி யாத்திரையின் போது இசைக்கப் பட்டது | |

சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
ஜாதியில் மேலோர் என்றும் தாழ்ந்தவர் தீயோரென்றும் பேதமில்லாது
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
உலகினிலே இது தான் நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
ஆண்டி எங்கே அரசனும் எங்கே ஆண்டி எங்கே அரசனும் எங்கே
அறிஞன் எங்கே அசடனும் எங்கே அறிஞன் எங்கே அசடனும் எங்கே
ஆவி போன பின் கூடுவார் இங்கே ஆவி போன பின் கூடுவார் இங்கே
ஆகையினால் இது தான் நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
சேவை செய்யும் தியாகி ஸ்ருங்கார போகி
சேவை செய்யும் தியாகி ஸ்ருங்கார போகி
ஈசன் பொற்பாதம் தன்னை நாடிடும் யோகி
ஈசன் பொற்பாதம் தன்னை நாடிடும் யோகி
எல்லோரும் இங்கே ஒன்றாய் உறங்குவதாலே
எல்லோரும் இங்கே ஒன்றாய் உறங்குவதாலே
உண்மையிலே இது தான் நம் வாழ்வில் காணா

சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org